அதைக் கோவிலுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதான நிலைமை வந்திருக்கிறது. இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த கொள்ளையிலே ஈடுபட்ட—இங்கே நம்முடைய அனந்தன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே—ஃபூல் பாண்டியன், அவன் சில மாதங்களுக்கு முன்பு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

பார்வையற்றவர்களுக்கு பள்ளிக்கூடம்

*2648 திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டில் பார்வையற்றவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு மாவட்டத்தில் பார்வையற்றோர் பள்ளிக் கூடத்தைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் பார்வையற்றோர் பள்ளிக்கூடம் துவங்க என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பூவிருந்தவல்லியில் ஏற்கனவே ஒரு பார்வையற்றோருக்கான பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு இடத்திலே புதிதாக பார்வையற்றோர் பள்ளியைத் துவக்குவதற்கு வேறு எந்த விதியும் தேவையில்லை, அரசு நிதிதான் தேவைப்படுகிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு அதைச் சுற்றி 6 தொகுதிகள் அடங்கி இருக்கின்றன. பூவிருந்தவல்லியில் படிப்பதற்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் வந்து பள்ளிக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மையமாக இருக்கிற செங்கற்பட்டு நகரத்தில் ஒரு பார்வையற்றோர் பள்ளியைத் துவக்கும் செயற் குறிப்பை அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் மாணவர்கள் அங்கேயே தங்கிப் பயிலுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே பார்வையற்ற மாணவர்கள் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து பள்ளியிலே வந்து படிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப் போன்ற பார்வையற்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதியைச் செய்து தர சில தனியார் தொண்டு நிறுவனங்கள் மைய மாநில அரசினுடைய நிதி உதவியைப் பெற்று அவர்களும் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஒரு பகுதியிலே இதைப் போன்ற பள்ளிகள் அவசியம் தேவை என்று விரும்பினால், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் அப்படிப்பட்ட பள்ளிகளை அமைப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்யலாம். மாணவர்கள் இப்போது பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் தங்கிப் பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. யாராவது மாணவர்கள் அந்தப் பள்ளியில் தங்கிப் பயில வேண்டும் என்றால், சம்பந்தப்பட்டத் தலைமை ஆசிரியர் அவர்களை அணுகி அந்த மாணவர்களை அந்தப் பள்ளியிலே சேர்த்துப் பயில வைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவு மையங்களுக்கு முட்டைகள்

*3724 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் வாங்கி விநியோகம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் இருந்து வாங்கி வினியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS